# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.

C.C.No. 186 /2018

Deposition of witness for: PW -1

| | | | |
|---|---|---|---|
| Name | :Natarajan | Father/Husband Name: Muthukalai | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 23.03.2021 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2021.

முதல் விசாரணை:

நான் பொட்டப்பனையூரில் வசிக்கிறேன். கூலிவேலை செய்கிறேன். இந்த வழக்கில் இறந்துபோன பாப்பு என்பவர் என் அம்மா. ஆஜர் எதிரியை நான் பார்த்ததில்லை. கடந்த 10.08.14ம தேதி இரவு சுமார் 10.50 மணியளவில் நாங்கள் பாண்டிச்சேரி மற்றும் திருப்பதிக்கு சென்றுவிட்டு திரும்பி வரும்வழியில் கருங்காலக்குடியிலுள்ள அய்யங்கார் பேக்கரியில் நானும் என் அம்மாவும் எங்களது பேருந்திலிருந்து இறங்கி டீ சாப்பிட்டுவிட்டு எங்கள் பேருந்தின் அருகில் நின்று பேசிக்கொண்டிருந்தோம். அப்போது தெற்குநோக்கி வந்த அரசு பேருந்தை அதன் ஓட்டுநர் அதிக வேகமாக வந்து என் அம்மாவின்மீது மோதியதில் என் அம்மாவின் பிடரியில் அடிபட்டு இரத்தக்காயமானது, இடது கையில் காயம்பட்டும் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். பிறகு ஆம்புலன்சில் ஏற்றி மேலூர் அரசு மருத்துவமனையில் சேர்த்தோம். மறுநாள் காலை சுமார் 8 மணியளவில் கொட்டாம்பட்டி காவல்நிலையம் சென்று நான் புகார் கொடுத்தேன். அந்த பேருந்தை ஓட்டிவந்த ஓட்டுநர் பெயர் வேல்முருகன் என்று சொன்னார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான், அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

எனக்கு எழுதப்படிக்க தெரியாது என்றால் சரிதான். சம்பவத்தின்போது மோதிய வாகனத்தின் பதிவு எண் எனக்கு தெரியாது என்றால் சரிதான், அதன்பின்பு தினசரி பேப்பரில் வந்த செய்தியில் பேருந்தின் பதிவு எண்ணை

பார்த்தேன். பேப்பரில் போடப்பட்டிருந்த புகைப்படத்திலும் வாகனத்தின் எணஂ் இல்லை என்றால் இருந்தது. அந்த வாகனத்தின் எண்ணை தற்போது என்னால் சொல்ல இயலாது என்றால் ஞாபகமில்லை. அன்றையதினம் திருப்பதிக்கு நான் போகவில்லை என்றால் சரியல்ல, நான் சென்றதாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. மோதிய வாகனத்தின் நிறம் எனக்கு தெரியுமா என்றால் பச்சை நிறம். நிறுத்தப்பட்டிருந்த எங்கள் வாகனத்தின் முன்பாக நானும் எனது அம்மாவும் நின்றோம் என்றால் இல்லை, எங்கள் வாகனத்திற்கு பின்புறம்தான் நின்றோம். அந்த இடத்தில் நிறைய வண்டிகள் நிறுத்தப்பட்டிருந்தது என்றால் சரிதான். எங்கள் வாகனத்தினை நான்குவழிச்சாலையிலேயே நிறுத்தியிருந்தோம் என்றால் வாகனங்கள் நிறுத்தும் இடத்தில் நிறுத்தியிருந்தோம். சம்பவ சமயத்தில் சர்வீஸ் ரோடே கிடையாது என்றால் ரோடு அகலமாக இருந்தது, அதில் ஓரமாக நிறுத்தியிருந்தோம். நான்குவழிச்சாலையில் ரோட்டின் இருபுறமும் குறுக்கே யாரும் செல்லக்கூடாது என்பதற்காக இரும்பில் தடுப்பு அமைக்கப்பட்டிருந்தது என்றால் தற்போதுதான் அது போடப்பட்டுள்ளது. முன்னாடியே இருந்தது நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. ரோட்டின் எந்தபுறத்தில் வாகனத்தை நிறுத்தியிருந்தோம் என்றால் இடதுபுறமாக நிறுத்தியிருந்தோம். நாங்கள் எந்த கடையில் டீ குடித்தோம் என்றால் அய்யங்கார் பேக்கரியில். கருங்காலக்குடியில் எத்தனை அய்யங்கார் பேக்கரி உள்ளது என்றால் சம்பவ சமயத்தில் ஒன்றுதான் இருந்தது. எங்கள் வாகனத்தை நிறுத்திவிட்டு எதிர்புறத்திலிருந்த அய்யங்கார் பேக்கரிக்குதான் டீ குடிக்கச்சென்றோம் என்றால இல்லை. வண்டியை நிறுத்திவிட்டு அதனருகே கிழக்குபுறத்திலிருந்த கடையில்தான் டீ குடித்தோம். அந்த இடத்தில் நிறைய வாகனங்கள் நிறுத்தப்பட்டிருந்ததால் மோதிய வாகனம் எந்த வேகத்தில் வந்தது என்று தெரியாது என்றால் நான் அப்பொழுது சிறுநீர் கழிப்பதற்காக சென்று வருவதற்குள் விபத்து நடந்தது. மோதிய வாகனம் ஆரன் அடித்து வந்ததா, மெதுவாக வந்ததா போன்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். என் தாயாருக்கு இறந்த சமயத்தில் வயது 70 இருக்கும் என்றால் 56 அல்லது 57 இருக்கும். சம்பவ இடத்திலிருந்து 100 மீட்டர் தொலைவிற்குள் போலீஸ் பீட் உள்ளது என்றால் தெரியாது. சம்பவம் நடந்த உடனே போலீசார் வந்துவிட்டனர் என்றால் சரிதான். புகார் உடனே கொடுக்கப்பட்டது என்றால் மருத்துவமனையில் சேர்த்துவிட்டு மறுநாள் புகார் கொடுத்தேன். மருத்துவமனையில் வந்து புகார் வாங்கிகொண்டனர் என்றால சரிதான். அந்த புகாரில் நான் கையெழுத்து மட்டும்தான் செய்தேன் என்றால் நான் எழுதியிருந்ததில் கையெழுத்து

செயள்தேன். சாட்சிகள் அணைவரும் என் உறவினர்கள் மற்றும் ஊர்க்காரர்கள் என்றால் எங்கள் ஊரின் அருகே உள்ளவர்கள். நான் சம்பவத்தன்று என் தாயாருடன் வரவில்லை என்றாலும், என் அம்மா இறந்ததற்கு இழப்பீடு வழக்கு போடுவதற்காக நானும் உடன் சென்றதாக பொய்யாக புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 186 /2018

Deposition of witness for: PW -2

Name :Manoharan Father/Husband Name: Sangilikonar

| | | | |
|---|---|---|---|
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 23.03.2021 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2021.

முதல் விசாரணை:

நான் பொட்டப்பனையூரில் வசிக்கிறேன். கூலிவேலை செய்கிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். சுமார் 7 வருடங்களுக்கு முன்பாக ஒருநாள் கருங்காலக்குடி ரோட்டின் அருகில் வைத்து போலீசார் வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்து விசாரித்து என்னிடமும் பெரியசாமி என்பவரிடமும் சாட்சியாக கையெழுத்து கேட்டதன்பேரில் கையெழுத்து செய்தோம். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

எனக்கு எழுதப்படிக்க தெரியாது என்றால் சரிதான். அ.சா.1 என் ஊர்க்காரர் என்றால் சரிதான். கருங்காலக்குடி என்ற ஊரே தெரியாது என்றால் தெரியும். என்னை போலீசார் விசாரிக்கவில்லை என்றால் படம் வரைந்தனர் மற்றும் யார் இறந்தனர் என்று என்னிடம் கேட்டனர். படம் வரைந்தது மட்டும்தான் எனக்கு தெரியும் அதற்கு முன்பு நடந்த சம்பவம் தெரியாது என்றால் சரிதான். என்னிடம் மேலூர் மருத்துவமனையில் வைத்து படத்தில் கையெழுத்து வாங்கப்பட்டதா அல்லது கொட்டாம்பட்டி காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து வாங்கப்பட்டதா என்றால கருங்காலக்குடியில் வைத்து கையெழுத்து வாங்கப்பட்டது. சம்பவம் நடந்து ஒரு வாரம் கழித்து என்னிடம் கையெழுத்து வாங்கினார்களா என்றால் சம்பவம் நடந்த அன்றே காலையில் கையெழுத்து வாங்கினார்கள். அந்த படத்தை பார்த்து அந்த படத்திற்கு கீழ் கையெழுத்து செய்தேன்

என்றால் இல்லை, அதற்கு அடுத்த பேப்பரில் கையெழுத்து செய்தேன். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் படித்து சொன்னார்கள், ஆனால் மறந்துவிட்டேன். படத்திலும் என்ன என்ன படம் வரைந்திருந்த விவரம் தெரியாது என்றால் அவர்கள் கையில் வைத்திருந்தார்கள் எனக்கு தெரியாது. சம்பவம் நடந்த இடத்தில் என்ன என்ன கடையில் இருந்தது என்ற விவரம் தெரியாது என்றால் நிறைய கடைகள் இருந்தது என்ன என்ன கடைகள் என்று தெரியாது. என்னிடம் அரைமணிநேரம் விசாரித்திருப்பார்களா என்றால் சிறிதுநேரம் விசாரிதத்தனர். இறந்தவர் எனது சின்னம்மா என்பதால் நான் கருங்காலக்குடிக்கு போனதாக பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடன் கையெழுத்து செய்தவர் எப்பொழுது கையெழுத்து செய்தார் என்று எனக்கு தெரியாது என்றால் அவர் என்னுடன்தான் கையெழுத்து செய்தார், அவர் என் உறவினர் என்றால் என் அண்ணன் மகன்.